# தவக்காலம் 4ஆம் ஞாயிறு திருப்பலி
# A ஆண்டு - 15 மார்ச் 2026

**தவக்காலத்தின் 4ஆம் ஞாயிறு A ஆண்டு மார்ச் 22 2026**
**முதல் வாசகம் : 1 சாமு 16: 1, 6-7ஈ 10-13**
**2ஆம் வாசகம்: எபே 5: 8-14**
**நற்செய்தி வாசகம்: யோவா 9:1-41**

**முன்னுரை :**

சில ஆண்டுகளுக்கு முன் நான் படித்த ஒரு பள்ளிச் சிறுவனைக் குறித்து இப்போது உங்களுடன் நான் பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறேன்.
பள்ளி ஒன்றில் படித்துக் கொண்டிருந்த சிறுவனுக்கு மரக்கழிவுகள், உலோகக் கழிவுகள் ஆகியவற்றிலிருந்து சிறு சிறு சிக்கலான, நுணுக்கமான உருவங்களை உருவாக்க விரும்பினான். அவ்வாறு செய்யும் போது அவனது வகப்புத் தோழர்கள் அவனை எள்ளி நகையாடினர் ”நீ செய்யும் இந்த சிறிய உலோகங்களால் என்னப் பயன்? இதை யாரும் கண்டுக்கொள்ள மாட்டார்கள்” என்று கிண்டல் செய்தனர். அந்தப் பையன் அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. அவன் அவற்றை எப்போதும் போல செய்துக் கொண்டிருந்தான். பள்ளியிலிருந்த மற்ற ஆசிரியர்கள் கூட அவனைக் கண்டுக்கொள்ளவில்லை. ஆனால் அப்பள்ளியின் ஆசிரியர் ஒருவர் மட்டும் இந்த மாணவன் செய்வதை உற்று நோக்கி கவனிக்கலானார். அவற்றை செய்வதற்கு அவன் காட்டும் ஆர்வத்தையும், அவனது கற்பனைத் திறனையும், அவற்றை செய்வதில் அவர் காட்டிய அர்ப்பணிப்பையும் அவர் நுணுக்கமதாக கவனிக்கத் தவறவில்லை. மற்றவர்கள் அற்பமாக நினைத்து உதறித் தள்ளியதை அவர் பெரிதாக எண்ணினார். மற்றவர்கள் அவசியமற்றதாகக் கருதிய நிலையில் அந்த ஒரு ஆசிரியர் மட்டும் அச்சிறுவனுள் மறைந்திருந்த மகத்தான திறனைக் கண்டுணர்ந்தார்.

இன்றைய வபசகங்கள் நம்மை அத்தகையக் கண்கொண்டு பார்க்க அழைக்கின்றன. சாமுவேல், நன்கு வளர்ந்த, வலிமைவாய்ந்த, அனைவரையும் ஈர்க்கும் உருவம் கொண்ட ஈசாயியின் முதல் மகன் எலியாபு தான் அரசனாகத் தேர்வு செய்யப்பட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தார். ஆனால் கடவுளோ அந்த குடும்பத்தின் கடைக்குட்டியும், ஆடு மேய்த்துக் கொண்டிருந்த, யாவராலும் புறக்கணிக்கப்பட்ட, ஆனால் இறைநம்பிக்கை நிறைந்தவனாக விளங்கிய சிறுவனுமான தாவீதை அரசனாகத் தேர்ந்தெடுத்தார். மனித பார்வைகள் காணத்தவறியவற்றை இறைவனின் பார்வை கூர்ந்து கவனிக்கிறது.

நற்செய்தியில் பிறவியிலிருந்தே பார்வைத் தெரியாக ஒரு மனிதரை இயேசு சந்திக்கிறார். உலகம் அவரை ஊனமுற்றவராக, அடுத்தவர் தயவில் வாழும் மனிதராக அவரைக் கண்டது அதனால் அவர் சமுதாயத்தால் விளிம்புநிலை மனிதராகத் தள்ளப்பட்டார். ஆனால் இயேசு அவரது உள்ளத்தையும் அவரது செயல்பாட்டையும் காண்கிறார். இருள் சூழ் இடத்தில் ஒளி ஏற்றப்படுவதைப் போல, இமைகனிடை வல்லமையையும், இரக்கத்தையும் செளிப்படுத்தும் வண்ணம் பார்வையற்றவருக்குப் பார்வை தரப்படுகிறது. இரண்டு வாசகங்களும் இறைவன் மனிதர்களை அவர்களின் உருவத்தையும் தாண்டிய பார்வைப் பார்க்கிறார் என்பதை வெளிப்படுத்துகின்றன. அவர் மனிதரில் மறைந்திருக்கும் அவர்களது இதயத்தையும், உள்ளார்ந்த வலிமையையும், நம்பிக்கையையும் காண்கிறார். இவை மனிதக் கண்களால் பார்க்க முடியாதவை. இங்கே கூடி சேர்க்கப்பட்டுள்ள நாம் நமது கண்களையும். இதயங்களையும் திறந்து வைத்து கடவுள் நம் வாழ்வில் செய்துள்ளவற்றைக் காண அழைக்கப் பட்டிருக்கிறோம். நம் வாழ்வில் ஒளிந்திருக்கும் சாதாரண நிலைகளில், கண்டுணராத நிலை களிலும், நம்மில் உள்ள நொறுக்கப்பட்ட பகுதிகளிலும் அவரது ஒளி பாய்ச்சப்பட்டுள்ளதை இனம் காண்போம். எனவே இறையருள் நம்மிலுள்ள எளிய சிறிய சக்தியற்ற நம்மை அவரது அன்பையும். மாட்சியையும் வெளிப்படுத்தும் கருவிகளாக மாற்றியிருப்பதையும் அறிந்து அகமகிழ்வோம்.

**பாவ மன்னிப்பு வழிபாடு:**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே உம்மை அன்பு செய்வோருக்கு நீர் செய்வதற்கென தயாரித்து வைத்துள்ளவற்றை இதுகாறும் எந்தக் கண்களும் கண்டதில்லையே - ஆண்டவரெ இரக்கமாயிரும்.

இறைவன் செய்துள்ளவற்றைக் காணுமாறு மானுடரின் கண்களைத் திறந்து வைத்திருக்கின்றீர் - கிறிஸ்துவே இரக்கமாயிரும்.
ஒளியின் பிள்ளைகளாக வாழ்ந்திடவென எங்களுக்கு அழைப்பு விடுக்கின்றீர் - ஆண்டவரே எங்கள் மீது இரக்கமாயிரும்.
மன்னிப்பு வழங்கும் மன்றாட்டு:

நமமுடைய பொறுமையற்ற நிலைகளின் மீது நம் ஆண்டவர் பொறமைக் கொள்வாராக. நம் இயதம் தளர்ந்து விடும் போது ஆண்டவரே எமக்கத துணிவை வழங்குவீராக. நாங்கள் பாதைத் தவறி உம்மை விட்டு விலகிச் செல்லும் போது உம்மிடம் மீண்டும் திரும்ப வர எங்களுக்கு உதவி செய்வீராக. எங்களின் விசுவாசம் எங்கெல்லாம் பாவீனப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் அதை உறுதப்படுத்துவீராக. எங்களை முடிவற்ற நிலைவாழ்விற்கு அழைத்துச் செல்வீராக - ஆமென்.

மறையுரை - கடவுளின் கண்கள்வழியே பார்ப்பது --

சில ஆண்டுகளுக்கு முன் நான் பணி செய்துக் கொண்டிருந்த ஹோரேபு வானொலியிலிருந்து பத்திரிகைத் தலைமையகத்தில் பணிபுரிய ஆட்களை நியமிப்பதற்காக பத்திரிகை விளம்பரம் ஒ ஒன்று வெளியானது. அதில் பணியாற்ற விரும்புவோர் கத்தோலிக்க கிறிஸ்தவராக இருக்க வேண்டும் என்று அதில் கறிப்பிடப்பட்டிருந்தது. அதிலும் தமது விவாசத்தை வெளிப்படுத்து பவராக, கணிணியில் நன்குத் தேறியவராக இருக்க வேண்டும் என்றும் அவர் மனுவை அனுப்பும போது பொருளுள்ள விதமாக அது இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டி ருந்தது. பொருளுள்ள விதம் என்றால் திருச்சபை சார்ந்த என்றுப் பொருள். அதாவது அவர் சார்ந்துள்ள பங்கு ஆலயம் போன்ற தகவல்கள். ஆனால் உண்மையாக பொருளுள்ள என்றால் கடவுளின் பார்வையில் எப்படி இருக்க வேண்டும்? கடவுள் தம் பணிக்காக ஒருவரைத் தேர்வு செய்ய வேணடுமானால் அதற்குத் தேவையான நற்சாட்சிப் பத்திரம் எதுவாக இருக்க முடியும்?

இந்த கேள்வி இன்றைய முதல் வாசகத்திலும் எதிரொலிக்கின்றது. இஸ்ரயேல் மக்களுக்கு ஒரு புதிய அரசன் தேவைப்பட்டார். சவுல் கடவுளுக்குக் கீழ்ப்படியாததால் அவர் இவைனால நிராகரிக்கப்பட்டார். எனவே கடவுள் பெத்லகேமிலுள்ள ஈசாயியின் வீட்டிற்கு இறைவாக்கினர் சாமுவேலை அனுப்புகிறார். ஈசாயியின் மகன்களில் ஒருவர் இஸ்ரயேலின் அரசராக தேர்வு செய்யப்பட வேண்டும். சாமுவேல் நம்மைப் போன்ற மனிதரின் வெளிப்புறத் தோற்றத்தைக் காண்பவராகவே இருந்தார். அவர் ஈசாயியின் மகன் எலியாபைப் பார்க்கிறார். அவரே ஈசாயியின் மூத்தமகன். உயரமாக வளர்ந்தவர், வலிமைமிக்கவராகவும் காணப்பட்டவர் - சாமுவேலின் தேர்வு எலியாபாகவே இருந்தது. ஆனால் கடவுள் சாமுவேலிடம் ”நீ அவனது வெளித்தோற்றத்தையும், உயரத்தையும் மட்டும் பார்க்காதே. நான் அவனை நிராகரித்து விட்டேன். கடவுள் மனிதர் பார்ப்பதைப் போன்றுப் பார்ப்பது இல்லை. மனிதர் மற்ற மனிதரின் வெளித்தோற்றத்தை மட்டும் பார்க்கின்றனர். ஆனால் கடவுளோ மனிதரின் இதயங்களைக் காண்கிறார்” என்றார்.

ஈசாயியின் மகன்கள் ஒருவர் பின் ஒருவலாக சாமுவேலின் முன் அனுப்பப்படுகிறார்கள். ஆனால் அவர்களில் எவருமே கடவுளால் தேர்வு செய்யப்படவில்லை. ஆனால் இறுதியாகத் தேர்வு செய்யப்பட்டவர் தாவீது என்ற ஈசாயியின் கடைசி மகன். அவர் எடுப்பான தோற்றம் இல்லாதவர், அவர் வளர்ச்சியில் சிறியவராக, ஆடுகளை மேய்த்துக் கொண்டு அதிகமாக முக்கியத்துவம் தருவதற்கு ஒன்றும் இல்லாதவராக இருந்தார். ஆயினும் அவரே அன்று முன்னிலைப்படுத்தப்பட்டார். கடவுள் சாமுவேலிடம் ”இவரைய நான் அரசராக தேர்ந்தெடுத்து உள்ளேன்” என்றார். உடனே சாமுவேல் தாவீதை இஸ்ரயேலின் அரசராகத் திருப்பொழிவு செய்தார். அக்கணமுதல் சிறு பையனாகக் கருதப்பட்ட தாவீது, வீட்டிற்குக் கடைசி மகன் இஸ்ரயேலின் பேரரசராகவும், கடவுளின் மனநிலைக் கொண்டவராகவும் ஆனார்.

நமது தேர்வுகள் இறைவனின் தேர்வுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. கடவுள் மனிதரின் இதயங்களைப் பார்க்கிறார். கடவுள் மனித மனங்களிவ் மறைந்துள்ள உணர்வுகளை, அவர்களது இறை நம்பிக்கையை, அவர்களின் திறந்த மனத்தை மட்டுமே பார்க்கிறார். அவர் மனிதரின் கல்வித்திறன், அவர்களின் உடல் வலிமை, அவர்களுக்கு இருக்கும் பெயர் புகழ் ஆக்யவற்றைக் காண்பதில்லை. திருத்தூதர் பேதுருவைப் பார்ப்போம். அவர் ஒரு பாமர மீனவர். இயேசுவை தெரியவே தெரியாது என்று மும்முறை மறுதலித்தவர் ஆனால் அவர்தான் திருஅவை என்னும் மாபெரும் அமைப்புக் கட்டி

எழுப்பப்படும் பாறையாக மாற்றப்பட்டார். குருக்களின் பாதுகாவலரானப் புனிதராக வணங்கிக் கொண்டாடப்படும் புனித ஜான் மரிய வியான்னியை எடுத்துக் கொள்வோம். குருமடத்தில் கற்பிக்கப்பட்ட பாடங்களைக் குறிப்பாக இலத்தீன் மொழியைக் கற்றுக் கொள்ளாதவாறு திணறியவர், தோற்றத்திலும் சாதாரணமானவர் ஆனால் அவர் தான் இன்று பங்குத் தந்தையர்களின் பாதுகாவலரானப் புனிதராக போற்றப் படுகிறார். கடவுள் அனைவராலும் புறந்தள்ளப்பட்ட, பலகீனமான, சாமர்ய மனிதர் களையே தேர்ந்துக் கொண்டு அத்தகையோர் வழியாகத் தமது மாட்சி வெளிப்படுவதை மிகவும் விரும்புகிறார். .

இவை நமக்கு இன்றைய நற்செய்தியை நினைவுப்படுத்துகின்றன அதாவது பிறவியிலேயே பார்க்க இயலாதவராக இருந்த ஒருவரை நமக்குக் காட்டுகின்றன. ஒருவேளை ஒருநாள் பத்திரிகை ஒள்றில் நாளை நகரத்தின் முன்னியமான ஒரு பகுதியைக் குறிப்பிட்டு அங்க வருவோருக்கு தலா 100 யூரோக்கள் (ஐரோப்பிய நாட்டின் நாணயம்) தரப்படும் என்ற விளம்பரம் வெளியாகியிருக்கிறது என்று வைத்தக் கொள்வோம். அதைப் பார்த்ததும் எல்லாருமே நம்பி அந்த இடத்திற்கு ஓட மாட்டார்கள். சிலர் அந்த விளம்பரத்தை சந்தேகிப் பார்கள். சிலர் அதை ஏற்கத் தயங்குவார்கள், இதில் எதோ தந்திரம் உள்ளது என்று நினைப்பார்கள். சிலர் அதைப்பற்றி தீவிரமான விசாரிப்பார்கள், அதைக் குறித்துப் பலரும் பலவிதமாக தங்களுக்கள் கருத்துப் பரிமாற்றம் செய்தக் கொள்வார்கள். அனால் இதையெல்லாம் தாண்டி சில சிறபிள்ளைகள், அல்லது அந்த பணத்தின் தேவயை இருப்பவர்கள். சென்றுத் தான் பார்ப்போம் என்று பத்திரிகை விளம்பரத்தில் கொடுக்கப்பட்ட முகவரியை நோக்கி ஓடுவார்கள். அங்கே தங்களுக்கு வழங்கப்பட்ட அந்த எதிர்ப்பாராதுக் கிடைத்தப் பரிசுப் பணத்தை பெற்றுக் கொள்வார்கள், மகிழ்ந்தக் களிகூர்வார்கள். நற்செய்தியில் காணப்படும் பார்வையற்றவர் பணத்தைவிட மதிப்பு வாய்ந்தப் பரிசைப் பெறுகிறார். தான் இதுவரை இழந்திருந்த பார்வை என்னும் பரிசைப் பெற்றுக் கொள்கிறார். இயேசு அவரை குணப்படுத்திய விதம் முற்றிலும் வேறவிதமாக உள்ளது. தனது உமிழ்நீரை தரையில் உமிழ்ந்து சேறுண்டாக்கி அதை பார்வையற்றவர் கண்களில பூசி அவருக்குப் பார்வைத் திரும்பக் கிடைக்கச் செய்கிறார். இச்செயல் கடவுளுக்கும் அம்மனிதருக்குமிடை யிலான நெருக்கத்தைக் குறிக்கிறது.

ஆனாலும் உலகம் அதை ஏற்கத் தயங்குகிறது. அங்கு சூழ்ந்துள்ள அவரது அண்டை அயலார் நம்ப மறுக்கிறார்கள். பரிசேயர்கள் அம்மனிதரை கேள்விக் கேட்டு அவரை பழித்துரைக் கிறார்கள். தங்கள் கண் எதிரே நடந்துள்ளவற்றைக் காண மறுக்கிறார்கள். பார்வைப் பெற்ற மனிதர் இயேசு யார் புன என்று அறிந்துக் கொள்கிறார். அவர் பார்வைப் பெற்றதும் உடல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் இருளிலிருந்து ஒளிக்குத் திரும்பியவரானார். கடவுளுக்கு முன்பாக மண்டியிட்டு ''ஆண்டவரே உம்மை நம்புகிறேன்'' என்ற அவருக்கு சான்று பகர்பவராக மாறுகிறார்.

எனவே பார்த்தல் என்றால் என்ன? பார்த்தல் என்பதற்கான உண்மையானப் பொருள் என்ன? ஐபோனைக் கண்டுபிடித்த ஸ்டீவ் ஜாப் அந்தக் கருவியின் வழியாக உலகிலுள்ள உண்மைகளை மக்கள் பாாத்துத் தெரிந்துக் கொள்ளும் வண்ரும் அதன் வழியாக உலகையே தொடர்புப் படுத்தி இணைக்கவும் கண்டுப்பிடித்திருக்கலாம். ஆனால் அவா கண்டு பிடித்தக் கருவியால் பாாவையற்றவர்களுக்கு எப்பயனும் இல்லை ஏனெனில் அவர்களால அந்தக் கருவியின் திரையில் தெரியம் உரவங்களைப் பார்க்க இயலாது. ஆனால் இயேசு நமக்கருளும் பார்வை நமது உள்ளார்ந்த வாழ்வைக் கண்டுர்ந்துக் கொள்ள அவர் நம் இதயங்களுக்கு பார்வை அளிக்கிறார். புனித யூபரே என்பவர் தனது ''இளம் இளவரசி'' என்ற நூலில் ''ஒருவர் தன் இதயத்தால் மட்டுமே தெளிவாகப் பார்க்க இயலும். நமக்கு எது உண்மையாகத் தேவையோ அவை நமது ஊனக்கண்களுக்குத் தெரிவதில்லை.'' என்கிறார்.

கடவுளின் பார்வையில் பார்ப்பது என்றால் அது நமது சாதாரணப்பார்வையையும் தாண்டிய அகண்டு விரிந்தப் பார்வையாக இருத்தல் வேண்டும். இது மக்களின் உள்ளுணர்வு, அவர்களின் மாண்பு, அலர்களிடம் உள்ள நல்லவை அதிலும் அவர்கள் சமூகத்தால் நிராகரிக்கப்பட்டவர்களாக இருந்த போதிலும் நமது பார்வைகள் இந்த விதமான விரிந்தப் பார்வையாக இருத்தல் வேண்டும். அதாவது நாம் விளிம்வில் வாழும் மனிதர்கள், எளியவர்கள், ஏழைகள், பாவிகள் என ஒதுக்கப்பட்டவர்கள் - அதாவது தாவீதைப் போல ஆடு மேயக்கவென ஒதுக்கப்பட்டவர்கள். நற்செய்தியில் வரும் வீதியிலிருந்த பார்வையற்றவர், அப்படியானால் நாம் சந்தேகத்தைக் களைந்து விசுவாசத்தை அணிந்தவர்களாக பயத்தை தவிர்த்து நம்பிக்கையைத் தேர்ந்துக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

இது சாத்தியமற்றதாக ஒன்று அல்ல. தவக்காலம் நம்மை இத்தகையப் பார்வையைக் கொண்டவர்களாக பழகிக் கொள்ள நம்மை அழைக்கிறது.

இர சகோதரர்கள் தங்கள் பணிகளைக் குறித்து தர்க்கம் செய்துக் கொள்கிறார்கள். நம் அண்டை வீட்டிலுள்ளவர் எதிலோ மாட்டிக் கொண்டு அமைதியாகப் போராடுகிறார், நம்முடன் பணியாற்றுபவர் ஒருவர் நாம் அறியாத மனப்பாரங்களை சுமந்துக் கொண்டிருக்கிறார். இவை அனைத்தும் நாம் அறியாதவை. இத்தகைய நிலையில் தான் நம் இறைவன் நம்மை அத்தகையவர்களை நாம் நமது சாதாரணப் பார்வைப் பார்ப்பதையும் தாண்டி உண்மையான, ஆழமானப் பார்வை பார்க்க அழைக்கிறார். அவர்களுக்கு நமது கனிவால், இரக்கத்தால், பொறுமையோடு அவர்களுடனிருந்து அவர்களது நிலையைப் புரிந்துக் கொண்டு தக்க பதிலளிப்பவர்களாக நாம் இருக்க வேண்டும். யூகன் ரோத் என்பவர் " ஒரு மனிதர் தான் மனித நேயத்தோடு நடத்தப்படும் போது பல சந்தப்பங்களிரல் அவர் முற்றிலும் மாறப்பட்ட மனிதராக மாறிவிடம் வாய்ப்பிருக்கிறது.. நமது இறைநம்பிக்கை அன்பினாலான செயல்பாடுகளுடன் வெளிப்பட்டால் அது மற்றவர்களில் மாற்றத்தை நிகழ்த்துகிறது.

நாமும் நம்மைச் சூழ்ந்துள்ள இருளை அகற்ற வேண்டுமானால் அதனை எதிர்த்து அதை மேற்கொள்ள வேண்டும். பவுல் எபேசிய மக்களுக்கு எழுதிய மடலில் (எபே 5:14) "தூங்குகிறவனே விழித்தெழு இறந்தவனே உயிர்த்தெழு, கிறிஸ்து உன் மீது ஒளிர்ந்தெழுவார்" ஒளியின் மக்களாக உள்ள நாம் எங்கே அநீதி இழைக்கப்படுகிறதோ அதை வெளிச்சத்திற்குக் கொண்டுவருபவர்களாக இருக்க வேண்டும், பாவத்திற்கு எதிராகப் பேச வேண்டும், இறைவனின் ஒளி நமது மூலமான உலகில் ஒளிர வேண்டும். பார்வையற்றவரின் பார்வை எப்படி அரரைச் சுற்றியிருந்த உலகை ஒளிமயமாக மாற்றியதோ அவ்வாறே நம்முள் உள்ள இறையொளி அது எத்தனை சிறியதாக இருப்பினும் நம் குடும்பங்களை ஒளிர்விக்க வேண்டும், மேலும் நாம் வாழும் சமுதாயங்களை, நமது திருஅவைகளை ஒளிர்விக்க வேண்டும்.

நமது அச்ச உணர்வுகள் நாம் ஒளிர்வதைப் பின்னடையச் செய்கின்றன. நெல்சன் மண்டேலா ஒருமுறை "நமது அச்ச உணர்வுக்குக காரணம் நம்மிடம் உள்ளப் பற்றாக்குறையோ, அல்லது ஏதோ குறைபடுவதோ அல்ல ஆனால் நம்மிடமுள்ள ஒளியே காரணம்." மானிடர் அனைவரிலும் தமது மாட்சி வெளிப்படும் விதமாக நம் ஒவ்வொருவருக்கும் தனித்துவமாக ஒளியை வழங்கியிருக்கிறார் இறைவன். அடுத்தவர்கள் சௌகரியமாக இருக்க வேண்டும் என்பதற்காக நம்மை நாமே சுருக்கிக் கொள்வதால் உலகிற்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை. தாவீது அரசர் ஒளிர்ந்ததற்குக் காரணம் கடவுள் அவர் வழியாக ஒளிர்ந்தார். எனவே நாமும் இறைநம்பிக்கையோடு கடவுளுக்குக் கீழ்ப்படிந்து அன்போது செயலாற்று வோமாக.

இன்று நம்மையே நாம் கேட்டுக்கொள்வோம். உண்மையாகவே யார் வாாவையற்றவர்கள்? யார் உய்மையகவே தெளிவாகப் பார்க்கிறார்கள்? திருச்சட்டத்தின் மீது பற்றுள்ள பரிசேயரா? அல்லது இயேசுவால் தன் பார்வையைப் பெற்றுக் கொணடவரா? யாருடையக் கண்கள் உண்மைக்கும் அன்புக்கும் விழித்துக் கொண்டக் கண்கள்? இவையனைத்திற்கும் மேலாக இறையொளியால் நாம் நிரப்பப்படும் போது நாம் அதனை எப்படி ஏற்று பதிலளிக்கிறோம்? அவர் நம்மில் செயலாற்றுவதைக் கண்டுணர்கின்றோமா? நாம் இறைவனை நம்புகிறோமா? அவர் நம்மைக் குறித்து எடுத்திருக்கும் தீர்மானங்கள் நமது இதயத்தையும், நமது தேர்வுகயையும் சரியான விதத்தில் அவர் விருப்பப்படி செதுக்கப்படும்படி அவரை அனுமதிக்கிறோா?

இந்த மறையுரையை நான் ஒரு சிறுகதையோடு முடிக்கவிருக்கிறேன்.
சில ஆண்டுகளுக்கு முன் ஒரு குறைமாதக் குழந்தைப் பிறந்தது. மருத்துவர்கள் அது உயிர் வாழ்வதற்கு தகுதியற்றதாக மிகவும் பலகீமான இருந்ததாகக் கருதினர். மருத்துவர்கள் அந்த குழந்தைக்கு சிகிச்சை அளிக்கவும் தயங்கினர். இயற்கை அதன் கடமையை செய்யட்டும் என்று விட்டுவிட்டனர். ஆனால் பெற்றோர் அந்தக் குழந்தைக்காக அதிகமாக செபித்தனர். அதை மிகவும் ஜாக்கிரதையோடு கண்ணும் கருத்துமாகக் கவனித்து வளர்ந்து வந்தனர். அந்தக் குழந்தையும் பிழைத்துக் கொண்டான். வளர்ச்சியமைடந்தான். பின்னர் அந்த குழந்தை அளவற்றத் துணிச்சல்காரனாக, இரக்கமும் சேவை மனபடபான்மைக் கொண்டவனாக வளர்ந்தான். ஆம் கடவுளின் வழிகள் மறைவானதாகவும், எதிர்ப்பாராத விதமாகவும், அற்புதமானதாகவும்

இருக்கின்றன. இந்த உலகம் இனி இது ஒளிரவே ஒளிராது என்று எண்ணி ஒதக்கி வைகக்கும்போது அதை அவர் யாரும் எதிர்ப்பாராத நேரத்தில் ஒளிர்விக்கிறார்.

எனவே சகேபார சகோதரிகளே நமது இதயங்களைத் திறப்போம். கடவுளினட பார்வையில் பார்ப்போம். அவரது ஒளி நம்மை வழி நடத்த அவரை அனமதிப்போம். மற்றவர்களில் அவர் செயலாற்றுவளைக கண்டுக் களிப்படைவோம். அவரது வழிகளில் நம்பிக்கை வைப்போம். ஒளியின்றி இருளில் அதன் தேவையை அதிகம் வாழும் இந்த உலகில் நாம் ஒளிர்ந்நதிட இறையருளால் வழங்கப்பட்ட ஒளியால் நிரம்பி ஒளிர்வோமாக.

**இறுதி ஆசீர்:**

நமது வெித்தோற்றத்தையல்ல மாறாக நமது இதங்களை நோக்கும் இறைவன் நமது வாழ்விலும் அடுத்தவர் வாழ்விலும் அவரது பிரசன்னத்தைக் காண நமதுக் கண்களைத் திறந்து வைப்பாராக

அவரே நாம் அவரைத் துணிவுடன் பினபற்றிடச் செய்வாராக. நமது வழிகள், சிறியனவாக, யாராலும் கண்டுணராத விதமாக இருந்தாலும், நிச்ச்யமற்றதாகசுதட இருந்தாலும், நாம் அவரை நம்பும் போது நமது வழிகள் எளிமையானதாக ஆனால் அதே சமயம் நம்பிக்கையில் வேரூன்றியதாக இருக்கும் போது அவரது அருள் மிகவுகட வலிமை வாய்ந்ததாக செயல்படுவதாக.

இறைவன் உங்களை கிறிஸ்துவின் ஒளியால் நிரப்புவாராக. இனிமேல் இந்த உலகம் உஙகள் மீது எடுதவிருக்கும் பயஙகள், சந்தேகங்கள், அல்லது அவர்கள் மனவிருப்பபடி எழுதவிருக்கும் தீர்ப்புகள். ஆகியவற்றால் உங்கள் இதயங்கள் பார்வை இழந்துவிடாதபடி காக்கப்படுவனவாக. இதனால் நீங்கள் உங்கள் வாழ்வில் சந்திக்கும் பல்வேறு போராட்டங்களினிமித்தமும் மறக்கப்பட்ட நிலையிலும் இருளின் ஆதிக்கத்திலும் விடுபட்டவர் களுக்கு இரக்கமும் நம்பிக்கையம், நற்சுகமும் அளிப்பீர்களாக

அவ் உங்களை நம்பிக்கையால் திடப்படுத்துவாராக. தாவீதைப் போல நீங்களும் தாராள உள்ளத்தோடு அவருக்கு பணி செய்வீர்களாக. பிறவியிலேயே பார்வையிழந்தவரைப் போல அவர் உங்களுக்கு அளித்துள்ள குணமளிக்கும் வரத்தைக் குறித்து நீங்கள் அகமகிழ்வீர்களாக. அந்தக கொடையை நீங்கள் உங்கள் வாழ்வில் சந்திக்கம் அனைவரோடும் பகிர்ந்துக் கொள்வீர்களாக.

எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவன் உங்களை தந்தை மகன் தூய ஆவியார் ெயரால் ஆசீர்வதிப்பாராக - ஆமென்.

**இறுதி வழியனுப்புதல்:**

நீங்கள் உங்கள் வாழ்வில் சந்திக்கும் அனைவரிலும் கிறிஸடதுவின் அமைதியைக் கண்டுணர்ந்து அவர்களுக்குப் பணிபுரிந்திட சென்று வருவோம்.

**இல்லத்திற்கு எடுத்தச் செல்ய இனிதான நினைவுகள்:**

உண்மையில் யார் பார்வையற்றவர்? யார் உண்மையாகவே தெளிவாகப் பார்க்கிறவர்?

கடவுள் உங்களை உங்கள் கண்களால் மட்டுமல்ல உங்கள் இதயத்தாலும் காண அழைக்கிறார். அவரது ஒளிக்கு உங்கள் இதயங்களைத் திறவுங்கள். அவரது செயல்களின் நம்பிக்கை வையுங்கள். உங்களது வாழ்விலும் மற்றவர் வாழ்விலும் அது செயலாற்றுவதை நம்புங்கள். உங்களுள் உள்ள அவரது ஒளியை உலகின் மூலை முடுக்கிற்கெல்லாம் எடுத்துச் செல்லுங்கள்.

==================================================================

End of 4th Sunday of Lenten Liturgy